# DEPOSITION OF WITNESS

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C.180/2025**

**Prosecution witness : அ.சா. 8** **Date : 24.02.2026.**

| Name : தங்கராஜ் | Taluk : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Age : |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது ஆட்டையாம்பட்டி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.11.2023-ம் தேதி மேச்சேரி காவல்நிலையத்தில் நான் நிலையப் பொறுப்பில் இருந்த போது, மேட்டூர் அரசு மருத்துவமனையில் இருந்தது கிடைக்கப் பெற்ற காயத்தகவலின் பேரில் மேற்படி மருத்துவமனைக்கு காவலர் கருணாநிதி கசென்று அங்கு உள்நோயாளியாக இருந்த பெரியசாமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, என் வசம் ஒப்படைத்ததின் பெயரில் புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப **நி.கு.எண்.642/2023 u/Sec. 294(பி), 323, 324, 506(2) IPC** ஆக வழக்கு பதிவு செய்தேன். ஆகும். .

3. பிறகு நான் புலன் விசாரணை நகலை எடுத்துக்கொண்டு கடந்த 18.11.2023-ம் தேதி மாலை 5.30 மணிக்கு சம்பவ இடம் வாதி வீட்டு முன்பு சென்று சாட்சிகள் தமிழரசன் மோகனா ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன்.

4. பின்பு சாட்சிகள் ராசாமணி, அசோக்குமார், சுதா, தமிழரசன், மோகனா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பிறகு ராசாமணி என்பவர் கையால் அடித்த நிலையில் விசாரணை தெரிய வந்ததால் வாக்குமூலத்தின்அடிப்படையில் **நி.கு.எண்.642/2023 u/Sec. 294(பி), 323,**

324, 506(2) IPC லிருந்து u/Sec. 294(பி), 323, 324, 506(2) 352 IPC சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை வாயிலாக தயார் செய்து பிறகு மேல் விசாரணைக்காக காவல் உதவி ஆய்வாரளர் வசம் ஒப்படைத்தேன். பிரிவு மாறுதல் அறிக்கை **அ.த.சா.6** ஆகும்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

5.இந்த வழக்கில் நான் முழுமையாக விசாரிக்க வில்லை என்றால் ஆமாம். என்ன காரணத்திற்கு வழக்கு கோப்பை காவல் உதவி ஆய்வாளர் வசம் ஒப்படைதேன் என்றால் வழக்கின் தன்மையை கருதி ஒப்படைத்தேன்.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 180/2025**

**Prosecution witness : அ.சா. 7** **Date : 24.02.2026.**

| | |
|---|---|
| **Name : ராதாகிருஷ்ணன்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் தற்போது மேட்டூர் அரசு மருத்துவமனையில் முதுநிலை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.11.2023–ம் தேதியன்று இரவு 8.30 மணியளவில் மேட்டூர் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது, திரு.பெரியசாமி வயது 64, த/பெ கந்தசாமி என்பவரை அவருடைய மகன் அசோக்குமார் என்பவர் சிசிச்சைக்காக அழைத்துவந்தார்.

2) அவர் என்னிடம் கடந்த 14.11.2023 –ம் தேதி இரவு 7.00 மணிளவில் தன்னை இரண்டு தெரிந்த ஆண் மற்றும் பெண் இருவரும் தன்னை இரும்பு சார் மற்றும் டேப்பிளில் வீட்டில் வைத்து அடித்ததாக கூறினார். அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் 1)நெற்றியில் வெட்டிய காயம் சுமார் 4x0.5x0.5 c.m 2) வலது கை முட்டியில் கண்ணிய காயம் சுமார் 2x0.5x0.5 c.m ,மேலும் அவருக்கு சிகிச்சை அளித்து ஆறு நாட்கள் உள்நோயாளி பிரிவில் அனுமதித்து சிகிச்சை அளிக்கப்பட்டது. மேலும் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சொற்பகாயங்கள் என்றுதான் சான்றளிக்கப்பட்டது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

3) ஒரு வயதான நபர் தாழ்வாரத்தின் மீது முட்டி கீழே விழுந்தால் மேற்சொன்ன காயம் போல் காயம் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது.

**மறுவிசாரணை இல்லை.**

**ஒம்/- தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**